1979 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தடுப்புச் சுவர் கட்டவேண்டுமென்ற கோரிக்கை பாசன வசதியைப் பொறுத்து அல்ல. ஆனால் தடுப்புச் சுவர் ஏற்கெனவே 93 மீட்டர் நீளத்திற்கு இருக்கிறது. அதிலே மேல் பகுதியிலே 100 மீட்டர் நீளத்திற்கும் கீழ்ப்பகுதியிலே 140 மீட்டர் நீளத்திற்கும் 2 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு இருக்கிறது. இன்னும் தடுப்புச் சுவர் கட்டப்பட வேண்டுமென்றால் அது நகராட்சியின் மூலமாகத்தான் கட்டப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, நகராட்சி செல்ல வேண்டுமென்று அமைச்சர் குறிப்பிட்டார்கள். அரூர் பகுதியை நான் சொல்லவில்லை. அரூர் வாணியாறு, அந்த ஆறு மலைப் பிரதேசத்தில் இருந்து வருகிற ஆறு. மலை வெள்ள வேகத்தினால் அங்கே இன்றைக்கு ஆற்றில் மணல் இல்லை, கல்லும் செட்டும் தான் இருக்கிறது. நீர்ப்பாசனத்திற்கு அல்ல, ஆற்று நெடுகிலும் மணல் அரிப்பைத் தடுத்து அந்தப் பகுதியிலே கொஞ்சம் ஊற்று நீர்ப் பிடிப்பை ஏற்படுத்த வேண்டும். இல்லையென்றால் நாளுக்கு நாள் அரிப்பு ஏற்பட்டு அந்தப் பகுதியிலே வறட்சியாக ஆகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும், ஆகவே அரசு அதைப் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைப் பரிசீலிப்பதற்கு முன்னதாக அது எந்த அளவிற்குப் பாசன வசதிகளைப் பெருக்கும் என்பதையும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயனுள்ள திட்டமாக அது இருக்கும் என்பதையும் பரிசீலித்தற்குப் பின்னாலே விடையளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## தழுதாழை ஏரி அமைப்பு

*வினா எண். 116—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரம்பலூர் வட்டத்திலுள்ள தழுதாழை ஏரி அமைப்பதற்கென பெற்ற நிலங்களின் சொந்தக்காரர் களுக்கு ஈட்டுத் தொகை கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—

(அ) பெரம்பலூர் வட்டத்தில் தழுதாழை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள தழுதாழை ஏரித் திட்டத்திற்காக 57.41 ஏக்கர்களுக்கு சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு ஈட்டுத்தொகை வழங்க வேண்டியுள்ளது.

(ஆ) இதன் கீழ் நிலங்களுக்கு 1894-ம் ஆண்டு நிலம் எடுப்புச் சட்டத்தின் 4 (1) பிரிவின் கீழ் வரைவு விளம்பரமும், மற்றும் 6, 7 பிரிவுகளின் கீழ் வரைவு உறுதிகளும் தமிழ்நாடு அரசிதழ்களில் பிரசுரித்த பிறகு, தீர்ப்பு விசாரனை (award enquiry) நடத்த உரிய தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு, சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு ஈட்டுத் தொகை அளிப்பதற்கு விரைவு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தழுதாழை கிராமத்திலே ஏரி அமைப்பதற்காக 1973 ஆம் ஆண்டிலேயே ஏறத்தாழ 56 ஏக்கர் நிலம் விவசாயிகளிட மிருந்து கைப்பற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விவசாயி களுக்கு இன்னும் நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படாத காரணத்தால் அவர்கள் பலவித இன்னல்களுக்கு ஆளாகியிருக் கிறார்கள். அப்படி கைப்பற்றப்பட்ட நிலங்களை வைத்துத்தான் அந்த விவசாயிகள் பிழைத்து வந்தார்கள். ஆகவே உடனடியாக அவர்களுக்கு ஈட்டுத் தொகை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அந்த ஏரி அமைக்கப்படுவதன் மூலமாக எந்தவிதமான தண்ணீரும் வருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப, குழந்தைவேலு :—பேரவைத் தலைவ ரவர்களே, சிறிய நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் 2, 25.600 ரூபாய் செலவிலே அங்கே ஏரி கட்டப்பட்டு இன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் மூலமாக, சப்ளை வாய்க்காலின் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பாசன வசதியை அதிகரிக்கும் நோக்கோடு இன்று அந்த ஏரி கட்டப்பட்டு, அதன்மூலம் தண்ணீர் சப்ளை கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 57.41 செண்ட்டுக்கு இன்னும் பணம் கொடுக்க, 'அவார்ட் என்கொயரி' நடந்து முடியும் நிலையிலிருக்கிறது, கூடிய சீக்கிரத்தில் நட வடிக்கை எடுத்துமேலும் யார் யாருக்குப் பணம் கொடுக்கப்பட வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் பணம் கொடுக்கப்பட நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 20]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, வெட்டப்பட்ட வாய்க்காலின் மூலம் தண்ணீர் வர முடியாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியென்றால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் இதுவரையிலே அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லக்கூடிய புகார் இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து, சப்ளை வாய்க்காலின் மூலம் சரியாகத் தண்ணீர் போகவில்லை என்றால் சரியாகப் போகக்கூடிய நடவடிக்கை கூடிய சீக்கிரம் எடுக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 117-ம், 118-ம் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருப்பதால் இரண்டு கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

## சென்னை நகருக்குப் பால் விநியோகம்

* வினா எண். 117 திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மாநகருக்கு பால் விநியோகம் செய்வதற்கென எவ்வளவு பாலிதீன் பை செலவாகும்?

(ஆ) அதற்காக ஆகும் செலவு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு?

(இ) இந்த நடப்பாண்டில் இதுவரை எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டது?

(ஈ) இவை யாரிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) ஒரு நாளைக்கு சராசரி 1,70,000 பாலிதீன் பைகள் உபயோகப்படுகின்றன.

(ஆ) ஆண்டொன்று ஆகும் செலவு சுமார் ரூபாய் 70 இலட்சம்.

(இ) நடப்பாண்டில் ஏப்ரல் 1978 முதல் ஆகஸ்ட் 15 வரை ஏறத்தாழ ரூ. 26 இலட்சம்.

(ஈ) கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி மூலமாக வாங்கப்படுகிறது.

1. யூனியன் கார்பைடு — பம்பாய்
2. தேவன் பிளாஸ்டிக்ஸ் — சென்னை
3. போலின் இன்டஸ்டிரிஸ் — சென்னை
4. வடேரா பிளாஸ்டிக்ஸ் — பெங்களூர்
5. புரோகிரெஸ்ஸிவ் பிளாஸ்டிக் — கல்கத்தா
6. மெட்டல் பாக்ஸ் கம்பெனி ஆப் இந்தியா